# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0334/2016/ந

ஆணை எண்: 120 /2016

நாள்: 08 /07 /2016

திரு.மாரியப்பன்,
சிந்தாமணி, புளியங்குடி,
கடைய நல்லூர், திருநெல்வேலி மாவட்டம் –627255. மனுதாரர்

1. நகராட்சி ஆணையர்,
   நாகர்கோவில் நகராட்சி.
2. நகர்மன்றத் தலைவர்,
   நாகர்கோவில் நகராட்சி.
3. நியமனக் குழு உறுப்பினர்,
   நாகர்கோவில் நகராட்சி. எதிர் மனுதாரர்

## ஆணை

திரு.த.மாரியப்பன், த/பெ.(லேட்) தங்கசாமி நாடார், வார்டு எண்.4, கதவு எண்.2/101– A, சான்றோர் மடத்துத் தெரு, சிந்தாமணி– புளியங்குடி அஞ்சல், கடையநல்லூர் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம், என்கிற மனுதாரரால் 21.04.2016 நாளிட்டு தாக்கல் செய்யப்பட்ட முறையீட்டு மனு 25.04.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.0334/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

மனுதாரரது மனுவில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் நகராட்சியில் ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, முன் அனுபவம் உள்ள தன்னை விடுத்து முன் அனுபவமே இல்லாத திருமதி. சகீலா என்பவரை இலஞ்சம் பெற்றுக் கொண்டு நியமித்துள்ளதாக நாகர்கோவில் நகராட்சி ஆணையர், நகர்மன்றத் தலைவர் மற்றும் பணி நியமனக் குழு உறுப்பினர் ஆகியோர் மீது புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் முறைமன்ற நடுவம் அறிவிப்பாணை நாள்.06.05.2016–ன் மூலமாக நகராட்சி ஆணையர் தரப்பிலான எதிர் உறுதி ஆவணம்/அறிக்கையினைத் தாக்கல் செய்யுமாறு ஆணையிடப்பட்டது. நாகர்கோவில் நகராட்சி ஆணையரது ந.க.எண்.சி1/13370/12 நாள்.07.06.2016–ல் விரிவான அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி அறிக்கையில் நாகர்கோவில் நகராட்சியில் காலியாக இருந்த ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை நிரப்பிக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையரால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம், வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியல் விவரம், அரசாணைப்படி தினசரி நாளிதழ்களில் செய்யப்பட்ட விளம்பரத்தின்படி பெறப்பட்ட விண்ணப்பங்கள் விவரம், சான்றிதழ்கள் சரிசார்ப்பு விவரம், பணியிடத்திற்கான இனசுழற்சி (பொதுப்போட்டி–முன்னுரிமை) விவரம் , உரிய சான்றிதழ்கள் சமர்ப்பிக்கத் தவறியோர் விவரம், 28.12.2015 அன்று நடைபெற்ற நேர்முகத் தேர்வு விவரம், விதிகளின்படி நியமனக் குழுவினால் எடுக்கப்பட்ட முடிவு விவரம், நகர்மன்றத் தீர்மான எண் விவரம் மற்றும் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட பணி சேர்க்கைக்கான ஆணை விவரம் ஆகிய அனைத்து விவரங்களும் சம்பந்தப்பட்ட ஆவண நகல்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், மேற்படி அறிக்கையில் தேர்வு செய்யப்பட்ட நபர் திருமதி.சகீலா என்பவர் 31.12.2015 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருவதாகவும் நியமன நாளன்று அவர் 50 வயதை அடைந்தவராகவும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 1984–ம் வருடம் பதிவு செய்து 31 வருடங்கள் வேலைக்கு காத்திருப்பில் இருந்தவரென்றும் அவர் ஆதரவற்ற விதவையும் , இரு பெண் குழந்தைகளுக்கு தாயும் ஆவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பணி நியமன விதிகளும் முறையாக பின்பற்றப்பட்டு நியமனக்குழுவினரால் தேர்வு செய்யப்பட்டபின் உரிய தீர்மானத்தின் படி பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதெனவும் இதில் எவ்வித விதிமீறல்களும் இல்லை எனவும் அறிக்கையில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் நாகர்கோவில் நகராட்சி , நியமனக்குழுத் தலைவர், நகராட்சி ஆணையர் மற்றும் உறுப்பினர் ஆகியோரின் மாண்பிற்கும் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு முறையீட்டினை தாக்கல் செய்துள்ளார் எனக்குறிப்பிட்டு அறிக்கையில் மனுதாரரது புகார் முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களும் இம்முறை மன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன.

இந்நிலையில் மனுதாரரது புகார் குறித்தான ஆதாரங்களை கண்டறியும் பொருட்டு 30.06.2016 அன்று மனுதாரரிடம் இம்முறை மன்ற நடுவத்தால் விசாரணை நடத்தப்பட்டது.

மேற்படி விசாரணையின்போது மனுதாரர் கீழ்க்கண்டுள்ள ஆவணங்களை தனது தரப்பிலான சாதக அம்சங்களாக குறிப்பிட்டார்.

1. நகராட்சி ஆணையரால் விண்ணப்பங்கள் கோரி வெளியிடப்பட்ட பத்திரிக்கைச் செய்தி அறிவிப்பு (தினமணி நாள்.16.09.2015)

மேற்படி அறிவிப்பில் முன் அனுபவம் கோரப்பட்டுள்ளதெனவும், தனக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் முன் அனுபவம் உள்ளதெனவும், தேர்வு செய்யப்பட்ட நபர் முன் அனுபவம் அற்றவர் எனவும் தெரிவித்தார்.

மேற்படி அறிவிப்பால் மனுதாரரின் பெயர், மனுதாரரின் தகப்பனார் / கணவர் பெயர், முகவரி, பிறந்த தேதி, கல்வித் தகுதி, வகுப்பு/சாதி, முன்னுரிமை விபரம் ஆகியவற்றுடன் முன் அனுபவம் குறித்த விவரங்கள் விண்ணப்பத்தில் இடம் பெற வேண்டும் என மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நிரப்பப்பட உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு முன் அனுபவம் அவசியமென்ற நிபந்தனைகள் ஏதும் இடம் பெறவில்லை என்ற விவரங்கள் மனுதாரருக்கு விசாரணையின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

2. அரசாணை (நிலை) எண்.44 பணியாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (T2) துறை, நாள்.11.03.2015–ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டவாறு முன் அனுபவ அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படவில்லை என மனுதாரர் தெரிவித்தார்.

மேற்படி அரசாணையில் பத்தி எண்.3–ல் பூர்த்தி செய்யப்பட உள்ள பதவியிடத்தினைப் பொறுத்து கல்வித்தகுதி, அனுபவம், நேர்முகத் தேர்வு போன்ற பிற இனங்கள் உட்பட தேர்வு நடைமுறையில் மதிப்பெண் நிர்ணயிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது குறித்தும் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கென முன் அனுபவம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை என்பது குறித்தும், இப்பதவியிடம் நுழைவு நிலை பதவியிடம் (Entry Level Post) என்ற விவரமும் மனுதாரருக்கு விளக்கப்பட்டது.

அதனடிப்படையில் மனுதாரர் விவரங்களை தான் தவறாக அனுமானித்து புரிந்து கொண்டதை ஒப்புக் கொண்டார்.

விசாரணையின் இறுதியில் மனுதாரர் தெரிவித்திருந்த 'லஞ்சப் புகார்கள்' குறித்து ஆதாரங்களோ அல்லது தேர்வு செய்யப்பட்ட நபரிடமிருந்து பெற்ற அவ்வாறான தகவல்களோ அல்லது மனுதாரரை அவ்வாறான நோக்கத்துடன் எவரேனும் அணுகியது தொடர்பான விவரங்களோ இருப்பின் தாக்கல் செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் லஞ்சம் தொடர்பாக தான் குறிப்பிட்டதற்கு எந்த ஆதாரமும் / தகவல்களும் தன்னிடம் இல்லை எனத் தெரிவித்ததுடன் தனது எழுத்து மூலமான வாக்கு மூலத்திலும் அதனை உறுதி செய்துள்ளார். இது போன்ற ஆதாரமற்ற புகார்களை / குற்றச்சாட்டுகளை எழுப்புவது கண்டிக்கத்தக்கதென மனுதாரருக்கு எச்சரிக்கப்பட்டது.

எனவே, பெறப்பட்ட அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும், விசாணை மற்றும் வாக்குமூலத்தின் அடிப்படையில் மனுதாரரது குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என நிரூபணமானதால் இம்முறையீட்டினை தள்ளுபடி செய்து முற்றாக்கலாமென இம்முறை மன்றம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 08 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஓம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்:

1. திரு.மாரியப்பன்,
   வார்டு எண்.4, கதவு எண்.2/101–A,
   சான்றோர் மடத்து தெரு,
   சிந்தாமணி – புளியங்குடி (அஞ்சல்)
   கடைய நல்லூர், திருநெல்வேலி மாவட்டம் –627 855

2. நகராட்சி ஆணையர், நாகர்கோவில் நகராட்சி
   நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

3. மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்:

நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் , சென்னை–600 005.